செய்தி வெளியீடு எண்:138 நாள் : 01.03.2016

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 27.2.2016 அன்று தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் 735 கோடியே 73 லட்சத்து 9 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான கட்டடங்கள் மற்றும் திட்டங்களை திறந்து வைத்து, 119 கோடியே 22 லட்சத்து 33 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள். மேலும், பேரூராட்சிகளில் பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் 420 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 20,000 சூரியஒளி மின்சக்தியுடன் கூடிய கான்கீரிட் வீடுகள் கட்டுவதற்கான பணி ஆணையினை பயனாளிகளுக்கு வழங்கினார்கள்.

நகர்ப்புறங்களில் பெருகி வரும் மக்கட்தொகைக்கேற்ப குடிமைப் பணிகளை நிறைவேற்றிக் கொடுப்பது, அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வசதிகளை வழங்குவது உள்ளாட்சி அமைப்புகளின் தலையாய கடமைகளாகும். இத்தகைய பணிகளை மேற்கொள்ளும் உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டை ஊக்குவிக்கும் வகையிலும் பொது சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும், கழிவு நீரை அகற்றிடவும் பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தேனி மாவட்டம் – போடிநாயக்கனூர் நகராட்சி மற்றும் திருநெல்வேலி மாவட்டம் – சங்கரன்கோவில் நகராட்சியில் 4 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய அலுவலகக் கட்டடம்; வேலூர் மாவட்டம் – குடியாத்தம் நகராட்சியில் 2 கோடி ரூபாய் செலவில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புடன் மேம்படுத்தப்பட்ட ராபின்சன் குளம்; கடலூர் மாவட்டம் – கடலூர் நகராட்சி மஞ்சகுப்பம் மற்றும் தேவனாம்பட்டினம், கன்னியாகுமரி மாவட்டம் – நாகர்கோவில் நகராட்சி வடசேரி ஆகிய இடங்களில் 2 கோடியே 4 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மீன் அங்காடிகள்;

மதுரை மாநகராட்சியில் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கனரக வாகன நிறுத்துமிடம் மற்றும் 1 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நகர்ப்புர சுகாதார மையம்; கோயம்புத்தூர் மாநகராட்சியில் 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள உள்விளையாட்டு அரங்கம் மற்றும் உடற்பயிற்சிக் கூடம், குனியமுத்தூரில் 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் பள்ளிக் கட்டடம்;

சிவகங்கை மாவட்டம் – கானாடுகாத்தான் பேரூராட்சியில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அலுவலகக் கட்டடம்; சேலம் மாவட்டம்– இடங்கணசாலை பேரூராட்சியில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அலுவலகக் கட்டடம்;

தருமபுரி மாவட்டம் – காரிமங்கலம், சேலம் மாவட்டம் – ஜலகண்டாபுரம், தேனி மாவட்டம் – குச்சனூர், வேலூர் மாவட்டம் – விளாப்பாக்கம் ஆகிய பேரூராட்சிகளில் 1 கோடியே 56 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள்; விழுப்புரம் மாவட்டம் – மணலூர்பேட்டை பேரூராட்சியில் 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலையம்; சேலம் மாவட்டம் – கன்னங்குறிச்சி மற்றும் ஜலகண்டாபுரம், தஞ்சாவூர் மாவட்டம் – ஒரத்தநாடு, கிருஷ்ணகிரி மாவட்டம் – காவேரிப்பட்டிணம் ஆகிய பேரூராட்சிகளில் 3 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நவீன எரிவாயு தகன மேடைகள்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம் – லால்குடி, மண்ணச்சநல்லூர், முசிறி, சிறுகமணி, பாலகிருஷ்ணம்பட்டி, மேட்டுப்பாளையம், பொன்னம்பட்டி, உப்பிலியாபுரம், சிவகங்கை மாவட்டம் – சிங்கம்புணரி, கோட்டையூர், தஞ்சாவூர் மாவட்டம் – வல்லம், ஒரத்தநாடு, திருக்காட்டுப்பள்ளி, அதிராம்பட்டினம், பேராவூரணி, பாபநாசம், வேப்பத்தூர் ஆகிய பேரூராட்சிகளில் 2 கோடியே 86 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 25 சுகாதார வளாகக் கட்டடங்கள்;

தருமபுரி மாவட்டம் – பாப்பிரெட்டிப்பட்டி பேரூராட்சியில் பெண்ணையார் ஆற்றில் 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; கிருஷ்ணகிரி மாவட்டம் – காவேரிப்பட்டிணம் பேரூராட்சியில் 42 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாயக் கூடம்;

கிருஷ்ணகிரி மாவட்டம் – காவேரிப்பட்டிணம் பேரூராட்சியில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பேருந்து நிலைய வணிக வளாகக் கட்டடம்; தஞ்சாவூர் மாவட்டம் – திருவையாறு பேரூராட்சியில் 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நவீன இறைச்சிக் கூடம்,

கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள 23 பேரூராட்சிகள், பல்லடம் நகராட்சி மற்றும் 965 ஊரகக் குடியிருப்புகளைச் சேர்ந்த 12 லட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 224 கோடியே 92 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்; திருநெல்வேலி மாவட்டம் – மானூர் மற்றும் பாளையங்கோட்டை ஒன்றியங்களைச் சேர்ந்த 34 ஊரகக் குடியிருப்புகளைச் சேர்ந்த 22 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் 6 கோடியே 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர் திட்டம்; கரூர் நகராட்சியில் 85 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் 24 கோடியே 67 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் அபிவிருத்தி திட்டம்;

நாமக்கல் மாவட்டம் – பரமத்திவேலூர் பேரூராட்சியில் 25 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் 2 கோடியே 53 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் அபிவிருத்தி திட்டம்; காஞ்சிபுரம் மாவட்டம் – கருங்குழி பேரூராட்சியில் 14 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் 4 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் அபிவிருத்தி திட்டம்;

கடலூர் மாவட்டம் – கடலூர் நகராட்சியில் 65 கோடியே 14 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பாதாள சாக்கடை திட்டம்; திருப்பூர் மாவட்டம் – உடுமலைப்பேட்டை நகராட்சியில் 56 கோடியே 7 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பாதாள சாக்கடை திட்டம்; புதுக்கோட்டை மாவட்டம் – புதுக்கோட்டை நகராட்சியில் 48 கோடியே 16 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பாதாள சாக்கடை திட்டம்; நாகப்பட்டினம் மாவட்டம் – நாகப்பட்டினம் நகராட்சியில் 60 கோடியே 66 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பாதாள சாக்கடை திட்டம்; திருவள்ளூர் மாவட்டம் – திருவள்ளூர் நகராட்சியில் 54 கோடியே 79 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பாதாள சாக்கடை திட்டம்;

சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள உள்ளகரம் – புழுதிவாக்கம் பகுதிக்கு 24 கோடியே 24 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு முதற்கட்டமாக 3 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 195 தெருக்களை

உள்ளடக்கிய மூன்று மண்டலங்களில் சுமார் 20,600 மக்கள் பயன்பெறும் வகையில் பணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படுகிறது. திருவள்ளூர் மாவட்டம் – ஆவடி பெருநகராட்சியில் 103 கோடியே 84 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு முதற்கட்டமாக நாகம்மை நகர், பணந்தோப்பு காலனி மற்றும் சிவன் கோயில் ஆகிய மூன்று பகுதிகளில் உள்ள 444 தெருக்களில் சுமார் 114 கிலோ மீட்டர் நீளத்திற்கு பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படுகிறது;

பெருநகர சென்னை மாநகராட்சி – திருவொற்றியூர் பகுதி, அன்னை சிவகாமி நகரில் வசிக்கும் 11,000 மக்கள் பயன்பெறும் வகையில் 9 கோடியே 34 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடைத் திட்டம்;

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் 4 கோடியே 73 லட்சத்து 32 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 19 அம்மா உணவகங்கள்; பேசின் யானைக்கவுனி சாலையில் 59 லட்சத்து 66 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நாய்கள் இனக்கட்டுப்பாட்டு மையம்; ஒரகடம் மற்றும் முகப்பேர் கிழக்கு பகுதிகளில் 57 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 3 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மையங்கள்; சைதாப்பேட்டை – அரசு பண்ணையில் 26 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சத்துணவுக் கூடம்; ஓட்டேரி கால்வாய் குறுக்கே 2 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் எம்.எஸ். நகர் – நரசிம்மா நகரை இணைக்கும் பாலம்; ஒரகடம், வெங்கடாபுரம், கொரட்டூர், அண்ணா தெரு, அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம், முகப்பேர் மேற்கு, முகப்பேர் கிழக்கு ஆகிய இடங்களில் 3 கோடியே 73 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 7 நகர ஆரம்ப சுகாதார நிலையங்கள்; அம்பத்தூர் – கள்ளிக்குப்பத்தில் 42 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நவீன இறைச்சிக் கூடம்; முகப்பேர் மேற்கு, மவுண்ட் பூந்தமல்லி சாலை, வேளச்சேரி தாம்பரம் சாலை ஆகிய இடங்களில் 1 கோடியே 78 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 3 பூங்காக்கள்; பள்ளிக்கரணையில் 91 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பூங்கா மற்றும் சிறுவர் விளையாட்டுத்திடல்; கொட்டிவாக்கம் – குப்பம் சாலை மற்றும் திருவொற்றியூர் – வள்ளுவர் நகர் ஆகிய இடங்களில் 26 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில்

கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையங்கள்; உள்ளகரம் – எம்.ஜி நகர் தெரு, கீழ்ப்பாக்கம் – கோவில் தெரு ஆகிய இடங்களில் 76 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 வார்டு அலுவலகக் கட்டடங்கள்; அடையாறு – துர்காபாய் தேஷ்முக் சாலையில் 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மலர் மற்றும் பழங்கள் அங்காடிகள்; கோட்டூர்புரம், ஏரிக்கரை சாலையில் 38 லட்சத்து 57 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கடைகள்; துறைமுகம் – பல்லவன் சாலை, அம்பத்தூர் – தாதங்குப்பம், சேத்துப்பட்டு – பள்ளி சாலை ஆகிய இடங்களில் 82 லட்சத்து 96 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 பல்நோக்கு கட்டடங்கள்; பழைய வண்ணாரப்பேட்டை, பல்லவன் சாலை, மண்ணூர்பேட்டை, சேப்பாக்கம் ஆகிய இடங்களில் 96 லட்சத்து 98 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 5 உடற்பயிற்சி கூடங்கள்; அண்ணா நகர் – டி.பி. சத்திரத்தில் 1 கோடியே 23 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாயக் கூடம்; நெசப்பாக்கத்தில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நவீன எரியூட்டும் தகனமேடை; வடபழனி முருகன் கோயில் முன்புறம் 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கான நிழற்குடை மற்றும் 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 4 உயர்கோபுர மின் விளக்குகள்;

என மொத்தம் 735 கோடியே 73 லட்சத்து 9 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், தேனி–அல்லிநகரம் நகராட்சியில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள துப்புரவு பணியாளர்களுக்கான குடியிருப்பு; சின்னமனூர் நகராட்சியில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பேருந்து நிலையம்; திண்டுக்கல் மாநகராட்சியில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆத்தூர் காமராஜர் சாகர் அணை அருகில் கூடுதல் நீர் ஆதாரம் உருவாக்கிட கூடுதல் நீர்த்தேக்கம் கட்டுதல் மற்றும் பழைய நீர்த்தேக்கத்தை ஆழப்படுத்தும் பணி;

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட திருவொற்றியூர் – மணலி சாலை மற்றும் அம்பத்தூர்–மதனகுப்பம் ஆகிய இடங்களில் 13 கோடியே 45 லட்சத்து 19 ஆயிரம்

ரூபாய் மதிப்பீட்டில் 3 வாகன இயக்கூர்தி நிலையங்கள்; திருவொற்றியூர் தொகுதி – பாலகிருஷ்ணா நாயுடு காலனி, மணலி புதுநகர் ஆகிய இடங்களில் 87 லட்சத்து 95 ஆயிரம் மதிப்பீட்டில் 2 வார்டு அலுவலகக் கட்டடங்கள்; கோட்டூர்புரத்தில் 6 கோடியே 6 லட்சத்து 42 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள மீன் அங்காடி; சோழிங்கநல்லூர்–எழில் நகர், இராயபுரம்–சென்னை உருது பள்ளி ஆகிய பள்ளிகளில் 5 கோடியே 2 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைகள்; நெற்குன்றம், ஈக்காட்டுத்தாங்கல், தரமணி ஆகிய இடங்களில் 3 கோடியே 33 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள 3 நகர ஆரம்ப சுகாதார மையங்கள்; புழல், வளசரவாக்கம், பெருங்குடி, கண்ணகி நகர் ஆகிய இடங்களில் 22 கோடியே 42 லட்சத்து 64 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள படுக்கைவசதிகளுடன் கூடிய 4 மருத்துவமனைகள்; மாதவரம் மண்டலம்–சாஸ்திரி நகர், திரு.வி.க. நகர் மண்டலம்–நேர்மை நகர் ஆகிய இடங்களில் 2 கோடியே 42 லட்சத்து 1 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 2 எரிவாயு எரியூட்டகங்கள்; ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனை வளாகங்களில் 1 கோடியே 9 லட்சத்து 92 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 3 இரவு காப்பகங்கள்; அம்பத்தூர் மண்டலம்–கொரட்டூரில் தாமரை குளம், முகப்பேர் மேற்கு பகுதியில் மங்கள் ஏரி மற்றும் டி.என்.இ.பி–பாரிசாலை ஆகிய இடங்களில் 4 கோடியே 78 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள 3 பூங்காக்கள்; சைதாப்பேட்டை, சலவையாளர் காலனியில் 5 கோடியே 26 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சலவைக் கூடங்கள் மற்றும் ஓய்வறைகள்; வேளச்சேரி, சேவா நகர் 1 வது தெருவில் 4 கோடியே 72 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் வைக்கும் கிடங்கு; கொடுங்கையூரில் 21 கோடியே 76 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள 3 கால்வாய் பணிகள்;

என மொத்தம் 119 கோடியே 22 லட்சத்து 33 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் திட்டங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

மேலும், பேரூராட்சிகளில் 420 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சூரியஒளி மின் சக்தியுடன் கூடிய கான்கீரிட் வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக குடிசை மற்றும் மண் வீடுகளில் வசிக்கும் 20,000 குடும்பங்களுக்கு தலா

2 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் நிதியுதவியுடன் சூரியஒளி மின் சக்தியுடன் கூடிய கான்கீரிட் வீடுகள் கட்டுவதற்கு பணி ஆணைகளை வழங்குவதை துவக்கி வைக்கும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2 பயனாளிகளுக்கு பணி ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை சா. துரைசாமி, தலைமைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு அலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), நகராட்சி நிர்வாகம் மற்றம் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு. க. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர் பி. சந்தரமோகன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள்: 1.3.2016